பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 29 | ஞாயிற்றுக்கிழமை | 14.01.2024 | அதிர்வு 166

## தாயும், மகனும் விபத்தில் சாவு!

கோர விபத்தில் தாயும், மகனும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் மாத்தறை மாவட்டம், தெவிநுவரை பிரதேசத்தில் நேற்று இரவு 7.15 மணியளவில் 06

# இலங்கைக் கடற்படையின் படகு மோதி இந்திய இழுவைப் படகு பெரும் சேதம்!

## அந்தரித்த மீனவர்கள் மீட்கப்பட்டு தமிழகத்துக்கு அனுப்பிவைப்பு

CLICK HERE VIDEO

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டிய இந்திய மீனவர்களை அவர்கள் வந்த இழுவைப் படகுடன் கைது செய்யக் கடற்படையினர் முயன்ற வேளை மேற்படி இழுவைப் படகுடன் கடற்படையினரின் படகு மோதியுள்ளது. இதனால் இந்திய மீனவர்களின் படகு பெரும் சேதமடைந்து மீனவர்கள் உயிருக்குப் போராடிய சமயம் மீட்கப்பட்டு தமிழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், காரைநகரை அண்மித்த கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களை அவர்கள் வந்த இழுவைப் படகுகளுடன் கைது செய்ய இலங்கைக் கடற்படையினர் நேற்று நடவடிக்கை எடுத்தனர். இதன்போது கடற்படையின் ஒரு படகு மோதியதில் இந்திய மீனவர்களின் ஒரு படகு சேதமடைந்துள்ளது. இருந்தபோதும் அதிலிருந்த மீனவர்கள் கடற்படையினரின் உதவியுடன் ஏனைய மீனவர்களால் மீட்கப்பட்டு தமிழகத்துக்கு 06



# சம்பந்தன் அணியின் ஒத்துழைப்பு ரணில் அரசுக்குத் தேவையில்லை

## தமிழ் மக்களின் ஆதரவே வேண்டும் என்கின்றார் அமைச்சர் பிரசன்ன

**சம்பந்தனின் ஆதரவோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவோ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்குத் தேவையில்லை என்று அமைச்சரும் ஆளும் கட்சியின் பிரதம கொறடாவுமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.** 05

## கந்தக்காடு மோதல் கட்டுப்பாட்டுக்குள் தப்பியோடிய கைதிகளில் 72 பேர் சரண்



பொலனறுவை, வெலிக்கந்தை – கந்தக்காடுபுனர்வாழ்வுநிலையத்தில் இரு குழுக்களுக்கு இடையே நிலவிய அமைதியின்மை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. 06




இன்றும் தமிழரசுக் கட்சி சமாச்சாரம்தான்.

கடந்த 10 ஆம் திகதி கொழும்பில் சம்பந்தனின் இல்லத்தில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் தலைமைப் பதவிக்குப் போட்டியிடும் மூன்று வேட்பாளர்களும் – சுமந்திரன், சிறீதரன், யோகேஸ்வரன் மூவரும் – ஒன்று கூடி, இருந்து, உரையாடி, போட்டித் தவிர்ப்பை கொண்டு வருவது குறித்து ஆராய வேண்டும் 06



மூன்று படகுகளில் காரைநகர் கடற்பரப்புக்குள் நுழைந்த

# 12 இந்திய மீனவர்கள் கடற்படையால் கைது!

## இன்று நீதிமன்றத்தில் ஆஜர்

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்கள் கடற் படையினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், காரைநகரை அண்மித்த கடற் பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட 12 மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

12 மீனவர்களும் மீன்பிடிக்கப் பயன்படுத் திய 3 ட்ரோலர் படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு காங்கேசன்துறை கடற்படைக் முகாமுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

கைதான 12 மீனவர்களும் மயிலிட்டியில் வைத்து இன்று யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப் படவுள்ளனர்.








# செங்கடலைப் பாதுகாப்பதற்கு இலங்கைக் கடற்படைக் கப்பலா?

## முதலில் இந்திய இழுவைப் படகுகளைக் கட்டுப்படுத்துங்கள் என்று வலியுறுத்துகின்றது கடற்றொழில் அமைப்பு சம்மேளனம்

(எஸ்.நிதர்ஷன்,
பிரபாகரன் டிலக்சன்)

“இந்திய இழுவைப் படகுகளைக் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கும் இலங்கை அரசு செங்கடலைப் பாதுகாக்க இலங்கைக் கடற்படைக் கப்பலை அனுப்புகின்றது” – என்று யாழ்ப்பாணம் மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புகளின் சம்மேளன செயலாளர் அன்ரன் செபராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அத்துமீறிய இந்திய இழுவைப் படகுகளால் கடல் வளங்கள் அழிக்கப்படுகின்றன. இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் தொடர்ந்தும் அழிக்கப்படுகின்றது. இந்திய இழுவைப் படகுகளைக் கட்டுப்படுத்த இரு நாட்டு அரசுகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்திய இழுவைப் படகுகளைக் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கும் இலங்கை அரசு செங்கடலைப் பாதுகாக்க இலங்கைக் கடற்படைக் கப்பலை அனுப்புகின்றது. இலங்கைக்குப் பொருட்கள் கொண்டுவரப்படும் கடலைப் பாதுகாக்க வேண்டியது முக்கியம்தான். எனினும், மக்களின் வாழ்வாதாரத்தையும் இலங்கை அரசு கவனத்தில் எடுக்க வேண்டும்.

இங்கிருக்கக் கூடிய மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி இந்தியத் துணைத் தூதரகம் நன்கு அறிந்து வைத்திருக்கின்றனர். இந்திய தூதரக அதிகாரிகள் எமது பிரச்சினைகளை இந்திய அரசிடம் எடுத்துச் சொல்லி இழுவைப் படகுகளைக் கட்டுப்படுத்த வேண்டும். இல்லையேல் விரைவில் இந்தியத் தூதரகத்தை முற்றுகையிட்டு போராட்டம் மேற்கொள்வோம்.

இந்திய இழுவைப் படகுகள் மீனவர்களின் வலைகளை அழிக்கின்றன. இதனால் ஒருவேளை உணவுகூட இல்லாமல் மீனவர்கள் பலர் வாழ்வாதரம் பாதிக்கப்பட்டு இருக்கின்றனர். அவர்களுக்குக் கடற்றொழில் அமைச்சர் அல்லது இலங்கை அரசு நிவாரணம் வழங்க வேண்டும்.” – என்றார்.

# மோ. சைக்கிள் இருக்கையில் மறைத்து கொண்டு செல்லப்பட்ட கஞ்சா சிக்கியது

## வவுனியா – புளியங்குளத்தில் குடும்பஸ்தர் கைது!





(கி.வசந்தரூபன்)

வவுனியா, புளியங்குளம் பகுதியில் மோட்டர் சைக்கிள் ஒன்றின் இருக்கைக்குள் மறைத்துக் கொண்டு செல்லப்பட்ட கஞ்சாவுடன் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என புளியங்குளம் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா, புளியங்குளம் பகுதியில் விசேட அதிரடிப் படையினர் விசேட சோதனை நடவடிக்கையை முன்னெடுத்திருந்த போது முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் இருந்து மோட்டர் சைக்கிளில் ஏ9 வீதி ஊடாக பொல்காவலை நோக்கி பயணித்த குடும்பஸ்தரை மறித்து சோதனை செய்தனர்.

இதன்போது, மோட்டர் சைக்கிள் இருக்கைப் பகுதிக்குள் சூட்சுமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கிலோ 375 கிராம் கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட நபர் அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு புளியங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பொல்காவலைப் பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார். மேலதிக விசாரணைகளின் பின் அந்த நபரை கஞ்சாவுடன் நீதிமன்றில் முற்படுத்த புளியங்குளம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# கொழும்பு கொள்ளுப்பிட்டி பகுதியில் உள்ள மூன்று மாடிக் கட்டடத்தின் மேல் மாடியில் தீ!



கொழும்பு, கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் உள்ள மூன்று மாடிக் கட்டடம் ஒன்றின் மேல் மாடியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு தீ பரவியதாகக் கொள்ளுப் பிட்டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

தீ பரவிய போதும் கட்டடத்தின் மேல் மாடியில் இருந்த இருவர் எவ்வித காயங்களுமின்றி தப்பியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

28 தீயணைப்புப் படையினர் 7 தீயணைப்பு வண்டிகளுடன் தீப் பரவலை கட்டுப்படுத்தியுள்ளனர்.

இந்தத் தீப் பரவலில் ஏராளமான சொத்துக்கள் நாசமடைந்துள்ளன.

மின்கசிவு காரணமாக இந்த விபத்து இடம்பெற்றி ருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர்.










# சுவிஸ் பறந்தார் ரணில்

## 18ஆம் திகதி உகண்டாவுக்கும் விஜயம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு சுவிட்சர்லாந்து சென்றார்.

சுவிட்சர்லாந்தின் டாவோஸில் நடைபெறவுள்ள உலக வர்த்தக மாநாட்டில் பங்கேற்பதற்காக நேற்று அதிகாலை ஜனாதிபதி இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்றார்.

இந்த விஜயத்தின்போது, சுவிட்சர்லாந்து – ஆசிய வர்த்தக சபையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பசுமை பேச்சு ஒன்றியத்தின் கூட்டத்தில் 'எரிசக்தி வளத்தை உறுதி செய்யும் இலங்கையைக் கட்டியெழுப்புதல்' எனும் தலைப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரை நிகழ்த்தவுள்ளார்.

அத்துடன் பல்வேறு பிரமுகர்களுடன் ஜனாதிபதி பேச்சுகளை நடத்தவுள்ளார்.

இதேநேரம், சுவிட்சர்லாந்து விஜயத்தை நிறைவு செய்து கொண்டு ஜனாதிபதி எதிர்வரும் 18ஆம் திகதி உகண்டாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அணிசேரா நாடுகளின் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக அவர் அங்கு செல்லவுள்ளதோடு பல்வேறு நாடுகளில் தலைவர்களுடன் இரு தரப்பு பேச்சுக்களிலும் பங்கேற்கவுள்ளார்.

இந்த மாநாட்டை நிறைவு செய்து கொண்டு அவர் எதிர்வரும் 24ஆம் திகதி நாடு திரும்பவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யோகட், பால் பக்கெட் 'வற்'றால் விலை உயர்வு



யோகட் மற்றும் பால் பக்கற்றுகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன எனத் தேசிய நுகர்வோர் முன்னணி தெரிவித்துள்ளது.

வற் வரி காரணமாகவே இவ்வாறு விலை அதிகரிக்கப்பட்டுள்ளன என அதன் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இதனால் யோகட் விலை 10 ரூபாவால் அதிகரித்து 80 ரூபாயாக உயர்ந்துள்ளது.

பால் பக்கற்று ஒன்றின் விலை 40 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு அதன் புதிய விலை 200 ரூபாவாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# சம்பந்தன் அணியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றினால் ஜனாதிபதிக்கும், அரசுக்கும் ஆதரவு வழங்கத் தயார்" – என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி. தெரிவித்தார் என்று "திவயின" ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது. இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நிபந்தனைகளை முன்வைத்து அவருக்கும் அரசுக்கும் ஆதரவு வழங்குவது போல் பாசாங்கு செய்து தங்கள் காரியங்களை நிறைவேற்ற சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முயற்சிக்கின்றனர். அவர்களின் வியூகம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தெரிந்த விடயம். எனவே, சம்பந்தனின் ஆதரவோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவோ ரணில் அரசுக்குத் தேவையில்லை.

அபிவிருத்தியில் அதிகூடிய கவனம் எடுத்துச் செயற்படும் ஜனாதிபதி ரணில், அதற்கான இலக்கை அடையும் தருவாயில் அரசியல் தீர்வுக்கான செயற்றிட்டங்களையும் முன்னெடுத்து அதிலும் வெற்றி காண்பார். இதற்குத் தமிழ் மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும்." – என்றார்.

## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்று தீர்மானிக்கப்பட்டதல்லவா?

அந்த ஏற்பாட்டின் பிரகாரம் அடுத்த நாள் வியாழக்கிழமை காலையில் மாதிவெலவில் சிறீதரன் எம்.பிக்கு ஒதுக்கப்பட்டுள்ள இல்லத்தில் சந்திப்பு நடந்தது. கொழும்புக்கு வந்த யோகேஸ்வரன் அங்குதான் சிறீதரனுடன் தங்கி இருந்தார்.

காலை 10:30 மணி அளவில் சுமந்திரன் வந்து சேர்த்தார். சுமார் 15 நிமிட நேரம்தான் மூவரும் பேசினர். விட்டுக் கொடுப்புக்கும் உடன்பாட்டுக்கும் இடமில்லை, தேர்தலே வழி என்று முடிவு செய்து கொண்டு சுமந்திரன் புறப்பட்டார்.

இது நடந்த சற்று நேரத்தில் ஒரு நண்பர் தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

உடன்பாடோ, இணக்கமோ வரவில்லை, தேர்தல்தான் முடிவு சென்ற தகவலை நான் கூற முன்னரே அதன் விவரம் அந்த நண்பருக்குத் தெரிந்திருந்தது. இன்னொரு விடயத்தையும் அவர் சொன்னார்.

“சுமந்திரனிடம் சிறீதரன் நல்ல ஒரு கேள்வியைக் கேட்டார். 2020 ஓகஸ்ட் பொதுத் தேர்தல் நடந்து முடிந்த கையோடு, தமிழரசுத் தலைவர் பதவிக்குத் தான் போட்டியிடுவார் என்று சிறீதரன் எம்.பி. ஒரு பேட்டியில் அறிவித்திருந்தார். அதற்கு அடுத்த நாள் சுமந்திரன் எம்.பியைச் சந்தித்த பத்திரிகையாளர்கள் சிறீதரனின் அந்த அறிவிப்புக் குறித்து சுமந்திரனிடம் கேட்டனர். ‘ஆம். சிறீதரன் தலைவர் பதவிக்கு போட்டியிட்டால் அதனை நான் முழுமையாக ஆதரிப்பேன்’ என்று சுமந்திரன் பதிலளித்திருந்தார். அதை கடந்த வியாழக்கிழமை சந்திப்பின்போது நினைவூட்டிய சிறீதரன், அந்த அறிவிப்பின்பிரகாரம் நீங்கள் இம்முறை எனக்காக விட்டு க்கொடுத்து, விலகி, அன்று நீங்கள் அறிவித்தமை பிரகாரம் உண்மையாக நடந்து கொள்ளுங்கள் என்று கேட்டாராம்.” – எனத் தகவல் வெளியிட்டார் அந்த நண்பர்.

“சரி. அந்தக் கேள்விக்கு சுமந்திரன் என்ன பதில் சொன்னார்? என்னிடமும் ஒரு தடவை சிறீதரன் இந்த விடயத்தைக் குறிப்பிட்டு இருக்கின்றார்” என்றேன் நான்.

“சுமந்திரனின் பதில் என்னவென்று தெரிந்தால் இந்த விடயத்தை நான் உங்களிடம் ஏன் கூறுகிறேன்? நீங்கள் தான் கேட்டு, விசாரித்து, உண்மையைக் கண்டறிந்து, பதில் தர வேண்டும்.” – என்றார் அவர்.

நான் சுமந்திரனிடம் இந்த விடயத்தைக் குறிப்பிட்டு, “அப்படி நீங்கள் 2020 ஓகஸ்ட் தேர்தலின் பின்னர் பகிரங்கமாக கூறினீர்களா? அப்படியானால் இப்போது ஏன் சிறீதரனோடு போட்டிக்கு நிற்கின்றீர்கள்? கடந்த வியாழனன்று சிறீதரனையும் யோகேஸ்வரனையும் நீங்கள் சந்தித்தபோது சிறீதரன் இந்த விடயத்தை நினைவூட்டினாரா? நீங்கள் என்ன பதில் கூறினீர்கள்?” – என்று நான் தொடர்ச்சியாக வினாத் தொடுத்தேன்.

சுமந்திரன் எல்லாவற்றையும் ஒப்புக் கொண்டார்.

“ஆம்.2020பொதுத்தேர்தலைஅடுத்து சிறீதரன் எம்.பி. அப்படி ஓர் அறிவிப்பை விடுத்தார். அவரது தலைமைப் பதவிக்கு நான் ஆதரவு அளிப்பேன் என்று நான் அப்போது பகிரங்கமாகக் கூறியமையும் முழு உண்மைதான். கடந்த வியாழனன்று எங்கள் சந்திப்பின்போது சிறீதரன் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியமையும் கூட உண்மைதான்.” என்றார் சுமந்திரன்.

“அப்படியானால் அவருக்கு உங்கள் பதில் எப்படி இருந்தது?” – என்று நான் பதில் கேள்வி எழுப்பினேன். “2020 தேர்தலைத் தொடர்ந்து சிறீதரன் எம்.பி. அப்படி அறிவித்த பின்னர், ஒரு சில மாதங்கள் கழித்து, வவுனியாவில் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் ஒன்று நடந்தது. அதில் இந்த விடயத்தை – சிறீதரனின் அறிவிப்பை – ஒரு பெரிய விவகாரமாகத் தூக்கிப் பிடித்துக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா விசனம் வெளியிட்டார். அப்போது சிறீதரன் தான் அப்படித் தலைவர் பதவிக்கு – தலைமைப் பதவிக்கு – போட்டியிடுவது என்று அச்சமயத்தில் அறிவித்தமை தவறு என்றும், அதற்காக தலைவர் மாவை சேனாதிராஜாவிடம் தான் மன்னிப்புக் கேட்கிறார் என்றும், அந்தத் தலைமைப் போட்டி அறிவிப்பில் இருந்து தான் விலகுகிறார் என்றும், அடுத்த ஐந்து வருடங்களுக்குத் தான் கட்சியில் எந்த ஒரு பதவிக்கும் போட்டியிட மாட்டார் என்றும், கட்சிக் கூட்டத்திலேயே அறிவித்துவிட்டார். அப்படி அறிவிப்பு விடுத்த பின்னர் அவருக்கு நான் ஆதரவு தருவது என்ற முன்னைய அறிவிப்பு விடயமும் செயலிழந்து விட்டது. இப்போது எனது அந்த – அப்போதைய – அறிவிப்பைத் தனக்குச் சாதகமான விடயமாக சிறீதரன் சுட்டிக் காட்ட முடியாது. தாம் கட்சியின் எந்தப் பதவிக்கும் போட்டியிட மாட்டார் என்று கட்சியின் கூட்டத்தில் அவர் கூறியமைதான் இப்போது முன்னால் நிற்கும் விடயம். அதை அன்று – கடந்த வியாழனன்று – ஶ்ரீதரனுக்கு நினைவூட்டினேன். அவர் அப்படிக் கட்சியின் கூட்டத்தில் தாம் அறிவித்தமையை ஒப்புக்கொண்டார். ஆனால், அடுத்த ஐந்து வருடங்களுக்குக் கட்சியின் எந்தப் பதவிக்கும் போட்டியிட மாட்டேன் என்று தாம் அப்போது கூறினார் என்று தமக்கு ஞாபகம் இல்லை என சிறீதரன் குறிப்பிட்டார். இல்லை, அப்படி அப்போது அவர் குறிப்பிட்டார் என்பதையும் ஆணித்தரமாக நான் வலியுறுத்தி நினைவூட்டினேன்.” – என்றார் சுமந்திரன்.

வாசகர்களுக்கு இத்தகவல்கள் சமர்ப்பணம்...!

## இலங்கைக் கடற்படையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

கடற்படையினரின் படகு மோதியதில் படகின் பக்கத் திசையில் ஒரு பக்கம் பெரும் சேதமடைந்துள்ளது.

இவ்வாறு சேதமடைந்த படகும் உடைவடைந்த நிலையில் தமிழகம் திரும்பியுள்ளது.

தமது படகு இலங்கைக் கடற்படையின் படகு மோதியதால் சேதமடைந்தபோதும் தாம் உயிர் தப்பி கரை சேர்ந்தோம் என்று இந்திய மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

## தாயும், மகனும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளும், பாரவூர்தியும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் சென்ற 42 வயதுடைய சுவேதிகா என்ற தாயும், 12 வயதுடைய தனுஷ்க என்ற மகனும் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளனர்.

தனியார் வகுப்புக்குச் சென்ற மகனை மோட்டார் சைக்கிளில் தாய் ஏற்றிக் கொண்டு வீடு திரும்பியபோதே இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ள பொலிஸார், விபத்துடன் தொடர்புடைய பாரவூர்தியின் சாரதியைக் கைது செய்துள்ளனர்.

## கந்தக்காடு மோதல்...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
இதனை புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி உறுதிப்படுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நேற்றுமுன்தினம்பிற்பகல்கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் மதிய உணவு தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினையின் அடிப்படையில் இரு குழுக்களுக்கிடையிலும் மோதல் ஏற்பட்டது. நேற்றுக் காலையும் இளைஞர்களுக்கிடையில் சற்று முறுகல் நிலை ஏற்பட்டது. எனினும், சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலையீட்டால் மோதல் கட்டுப்படுத்தப்பட்டது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதல் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சுமார் 90 கைதிகள் அங்கிருந்து தப்பிச் சென்றனர். அவர்களில் 72 பேர் சரணடைந்தனர். 18 பேர் இன்னமும் சரணடையவில்லை.

மோதல் சம்பவத்தில் 29 பேர் காயமடைந்தனர். அவர்களில் 26 பேர் வெலிகந்தை ஆதார வைத்தியசாலையிலும், 3 பேர் பொலனறுவை பொது வைத்திய சாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.” – என்றார்.

# அரசின் கொடூரங்களுக்கு சர்வதேச நீதியே வேண்டும்

## கஜேந்திரன் எம்.பி. வலியுறுத்து



தமிழ் மக்களை இலக்குவைத்து அரசு நிகழ்த்திய கொடூரங்களுக்குச் சர்வதேச நீதி கட்டாயம் வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"இந்த நாட்டில் 70 வருடங்களாக இனப்பிரச்சினை இருந்து வருகின்றது. தமிழர்களுக்கு எதிராக சிங்கள ஆட்சியாளர்களால் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

பயங்கரவாதம், பயங்கரவாதம் எனக் கூறி எல்லா விடயங்களையும் மறைக்க முடியாது. இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டுள்ளது. இந்த உண்மை ஏற்கப்பட்டு ஒரு புரிந்துணர்வுக்கு வர வேண்டும்.

ஒற்றையாட்சி முறைமை அழிக்கப்பட்டு சமஷ்டி அரசமைப்பு கொண்டு வரப்பட வேண்டும். அதன்மூலமே இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்." - என்றார்.

# தாயுடன் தொடர்பை பேணிய வேற்று நபர் ஒருவர் சிறுமிகளான இரு மகள்மார் மீதும் துஷ்பிரயோகம்

## களுத்துறைப் பகுதியில் சம்பவம்

தாயுடன் தொடர்பை பேணிய நபரால் இரு மகள்மார் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்ட சம்பவம் களுத்துறையில் இடம்பெற்றுள்ளது.

9 மற்றும் 13 வயதுடைய பெண் பிள்ளைகளை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய நபர் பயாகலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கலேவெல பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடையவராவார்.

பாதிக்கப்பட்ட சிறுமிகளின் தந்தை 4 வருடங்களுக்கு முன்னர் மனைவி மற்றும் பிள்ளைகளை விட்டு பிரிந்து சென்றுள்ளார்.

இந்நிலையில், இரு சிறுமிகளின் தாய் வேறொரு நபருடன் தொடர்பை பேணி வந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட சிறுமிகள் சுகயீனம் காரணமாக களுத்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது இரு சிறுமிகளும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

தாயுடன் தொடர்பை பேணிய நபரே இரு சிறுமிகளையும் அவர்களின் வீட்டில் வைத்து பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார்.



இது தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்தினர் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்ததையடுத்து சந்தேக நபர் பயாகலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பயாகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 42,248 சந்தேக நபர்களின் பட்டியலை கையளித்தார் பதில் பொலிஸ் மாஅதிபர்



நாடளாவிய ரீதியில் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 42,248 சந்தேக நபர்களின் பட்டியலை அனைத்து பொலிஸ் நிலையங்களின் குற்ற விடயங்களுக்கு பொறுப்பான அதிகாரிகளிடம், பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் கையளித்துள்ளார் எனப் பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நீதி நடவடிக்கையின் கீழ் அவர்களை கைது செய்யுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அந்த சந்தேக நபர்களில், 35,505 பேருக்கு பிடியாணைகள் உள்ளன. இதுவரை கைது செய்யப்படாத 4,258 சந்தேக நபர்களும், 2022 இல் இடம்பெற்ற குற்றங்களுக்காகத் தேடப்படும் 807 சந்தேக நபர்களும் மற்றும் 2023 இல் இடம்பெற்ற குற்றங்களுக்காக தேடப்படும் 1,678 சந்தேக நபர்களும் அதில் அடங்குகின்றனர்.

இந்நிலையில், இன்று முதல் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களும் நீதி நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட வேண்டுமென பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் நேற்று அறிவித்துள்ளார்.

இந்தப் பட்டியலுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை அடுத்த ஒரு மாத காலத்திற்குள் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த அனைத்துக் குற்றப்பிரிவு அதிகாரிகளையும் 24 மணி நேரமும் பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்றும் பதில் பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ஊருக்கடி உபதேசம்

மத்திய கிழக்குப் பிரச்சினையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை அரசின் அணுகுமுறை இரட்டை வேட நாடகம் போன்றிருக்கின்றது.

‘பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும்’ போக்குப் போன்றதாக உள்ளது. ‘ஊருக்கடி உபதேசம் உனக்கு இல்லையடி..’ என்ற பாணியிலும் இலங்கைத் தரப்பு நடந்து கொள்கின்றது.

காசாவில் அப்பாவி பாலஸ்தீனியர்கள் வகைத்தொகையின்றிக் கொன்றொழிக்கப்படுகிறார்கள். இஸ்ரேல் மேற்கொண்டிருக்கும் கொடூரப் பயங்கரவாதத் தாக்குதல்கள் பாலஸ்தீனம் என்ற தேசத்தையே முழுமையாக துவம்சம் செய்யும் இலக்கை - வெறியை - நோக்காகக் கொண்டது என்பது வெளியிடைமலை.

அதைத் தடுக்க - தவிர்க்க - செய்வதற்கு இலங்கை உட்பட எந்த சர்வதேச நாடும் காத்திரமான நடவடிக்கையை எடுக்கவில்லை. வெறும் கண்டன அறிவிப்புகளோடு சர்வதேசங்களின் மனசாட்சியே அடங்கி செத்துவிட்டது என்பது தெளிவு.

இஸ்ரேலின் கொடூர - ஈவிரக்கமற்ற - மிருகத்தனமான - மனிதநேயமே இல்லாத - காட்டுமிராண்டித்தனமான - பயங்கரவாதத் தாக்குதல்களினால் காசாவில் சிக்குண்டு சீரழிந்து தினசரி கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு அடிப்படை மற்றும் அத்தியாவசிய விநியோகம் கூட கிடைக்கவில்லை. அவற்றைப் பெற்றுக் கொடுப்பதை உறுதிப்படுத்துவதற்கு இலங்கையும் உட்பட்ட சர்வதேச சமூகத்தினால் இயலவே இல்லை.

இந்தப் பின்புலத்தில்தான் காசாவுக்கான அடிப்படை விநியோகங்கள் உறுதிப்படுத்தப்படாவிட்டால் செங்கடல் ஊடான இஸ்ரேலுக்கான விநியோகங்களை முடக்கும் விதத்தில் தாக்குதல்களை நடத்துவோம் என்று ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அறிவித்திருக்கின்றார்கள்.

காசாவில் நாள் கணக்கில் ஷெல், பீரங்கி மழைகளைப் பொழிந்தபடி, கண்மூடித்தன மான விமானக் குண்டு வீச்சுகளை நடத்தி, பேரழிவு ஆக்கிரமிப்பை முன்னெடுத்து, ஒரு தேசத்தையே முழுமையாக இஸ்ரேல் துவம்சம் செய்து கொண்டிருப்பதை ‘பயங்கரவாதமாக’ அடையாளம் காணாத இலங்கை உட்பட்ட சர்வதேச சமூகம், செங்கடலில் இஸ்ரேலுக்கான விநியோகத்தை முடக்கும் தாக்குதலை பயங்கரவாதமாக அடையாளம் கண்டு, அதை அடக்குவதற்காக அமெரிக்கா தலைமையில் சிலிர்த்தெழுந்திருக்கின்றது.

இலங்கை மக்களின் பெயரில் இந்தப் பெரும் அநியாயத்துக்கு ரணிலின் அரசு துணை போகின்றது.

அதுவும் பத்து அரபு நாடுகளின் தூதர்களைக் கூட்டி வைத்துக்கொண்டு, காசா மீதான தாக்குதல் பயங்கரவாதத்தை அங்கு பகிரங்கமாக ஒப்புக்கொண்டபடி, செங்கடல் பாதுகாப்பு நடவடிக்கைக்கு தனது நாட்டின் கடற்படை துணை போகும் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பது முரண்நகையான செயற்பாடாகும்.

அரபு நாடுகளுடன் நெருக்கமான உறவுகளை பேணுவதே இப்போது இலங்கையின் வெளியுறவுக் கொள்கை என்று தத்துவம் பேசியபடி, பாலஸ்தீன முஸ்லிம் மக்களுக்கு எதிரான அழிப்பு நடவடிக்கைகளுக்கு உதவுவது போல செங்கடலைப் பாதுகாக்கும் பணியில் தனது நாட்டுக் கடற்படையை இறக்குகின்றார் இலங்கை ஜனாதிபதி.

எந்த ஒரு நாடும் இன்னொரு தேசத்தை அழிக்க அனுமதிக்கக் கூடாது என்று அரபுநாடுகளின்தூதுவர்களின்முன்னால் தத்துவம் வேறு பேசுகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அவரது கட்சி தலைமையிலான அரசுகள்தான் இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலமும், புலிகளுடன் சேர்ந்து விடுத்த ஒஸ்லோ அறிவிப்பு மூலமும் இலங்கையில் தமிழருக்கு தனியான தேசம் இருப்பதையும், அதற்கு உள்ளக சுயநிர்ணய உரிமை இருக்கின்றமையையும் சர்வதேச மட்டத்தில் அங்கீகரித்து ஒப்புக்கொண்டன.

ஆனால் அவரது தற்போதைய அரசும் சேர்ந்துதான் இலங்கைத் தீவில் தமிழர் தேசத்தை அழிக்கும் கொடூரத்தை தொடர்ந்து புரிந்து கொண்டிருக்கின்றன.

அப்படிச் செய்து கொண்டு, இஸ்ரேல் நாடு பாலஸ்தீன தேசத்தை அழிப்பது குறித்து அரபு நாடுகளின் தூதுவர்கள் முன்னிலையில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதலைக் கண்ணீர் வடிப்பது ‘ஊருக்கடி உபதேசம், உனக்கு இல்லையடி!’ என்ற போக்கில் அமைந்ததுதான்.



# நேபாளத்தில் பஸ் ஆற்றில் விழுந்து விபத்து இரண்டு இந்தியர்கள் உள்பட 12 பேர் பலி!

**காத்மாண்டு, ஜன. 14**

நேபாள நாட்டின் டாங் மாவட்டம் நேபாள் கஞ்சில் இருந்து காத்மாண்டுக்கு பஸ் ஒன்று சென்று கொண்டிருந்தது. அப்போது திடீரென கட்டுப்பாட்டை இழந்த அந்த பஸ் பாலத்தில் இருந்து ராப்தி ஆற்றுக்குள் தலைகுப்புற கவிழ்ந்தது. இந்த கோர விபத்தில் 2 இந்தியர்கள் உள்பட 12 பேர் உயிரிழந்தனர். மேலும் 22 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பலியானவர்களில் 8 பேர் உடல்கள் அடையாளம் காணப் பட்டுள்ளன. இதில் இந்தியர்களான பீகாரை சேர்ந்த யோகேந் திரராம் (வயது 67), உத்தர பிரதேசத்தை சேர்ந்த முனே (வயது 37) என இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துப் பற்றி தகவல் அறிந்த பொலிஸார் மற்றும் மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். விபத் தில் காயமடைந்தவர்களை மீட்டு நேபாள் கஞ்சில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்., இறந்தவர்களின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அருகில் உள்ள மருத்துவமனைக்கு அவர்கள் அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்து பற்றி வழக்கு பதிவு செய்த பொலிஸார் பஸ் டிரைவரை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தைவான் ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் கட்சி வேட்பாளர் வெற்றி!

## சீனாவுக்கு கடும் அதிர்ச்சி

உலக நாடுகளின் பெரும் எதிர்ப்பார்ப்புக்கு மத்தியில் இடம்பெற்ற தைவான் தேர்தலில் ஆளும் ஜனநாயக முற்போக் குக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் லாய் சிங்-தே வெற்றி பெற்றுள்ளார்.

லாய் சிங்-தேவின் தேர்தல் வெற்றி, சீனாவுக்கு அதிர்ச் சியாக அமைந்துள்ளதென சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தைவானின் ஆளும் ஜனநாயக முற்போக்குக் கட்சி நேற்று இடம்பெற்ற தேர்தலில் வரலாற்றுச் சிறப்புமிக்க மூன்றாவது தொடர்ச்சியான வெற்றியைப் பெற்று ஜனாதி பதி பதவியைத் தக்கவைத்துள்ளது.

தைவானின் தற்போதைய துணைத் தலைவரான லாய் சிங்-தே சனிக்கிழமை மாலை வெற்றியை அறிவித்தார். அதே நேரத்தில் அவரது இரண்டு முக்கிய எதிர்க்கட்சி போட்டியாளர் கள் இருவரும் தோல்வியை ஒப்புக்கொண்டுள்ளனர்.

“எங்கள் ஜனநாயகத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதியதற்காக தைவான் மக்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். நமது ஜனநாயகத்தை நாம் எவ்வளவு




போற்றுகிறோம் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டியுள் ளோம். இது எங்களின் அசைக்க முடியாத அர்ப்பணிப் பாகும்,” என்று லாய் சிங்-தே ஊடகங்களிடம் தெரிவித் துள்ளார். மேலும் தனது இரு எதிர் போட்டியாளர்களிடம் இருந்து வாழ்த்துகளையும் பெற்றுக்கொண்டார்.

“ஜனநாயகத்திற்கும் எதேச்சதிகாரத்திற்கும் இடையில்



நாம் ஜனநாயகத்தின் பக்கம் நிற்போம் என்று சர்வதேச சமூகத்திடம் கூறுகிறோம்.

இந்த தேர்தலில் லாய் சிங்-தேக்கு 41 சதவீத மக்கள் வாக்குகள் கிடைத்தன. அவருடைய இரண்டு முக்கிய எதிர் போட்டியாளர்கள் முறையே 33 சதவீதம் மற்றும் 26 சதவீதத் துடன் பின்தங்கினர்.

கிழக்கு ஆசியாவில் பசிபிக் கடலில் அமைந்துள்ள தீவு நாடு தைவான். சீனாவுக்கு அருகே அமைந்துள்ள இந்நாட்டை தனி நாடாக சீனா அங்கீகரிக்கவில்லை. மேலும், தைவான் தங்கள் நாட்டின் ஒரு பகுதி எனவும் சீனா கூறி வருகிறது.

இதற்கிடையே, தைவானில் 4 ஆண்டுக்கு ஒருமுறை அதிபர் தேர்தல் நடைபெறுவது வழக்கம். அந்தவகையில் அதிபர் தேர்தல் நேரம் று நடைபெற்றது. அங்கு ஆட்சியில் உள்ள ஜனநாயக முற்போக்கு கட்சி சார்பில் லாய் சிங்-தே அதிபர் வேட்பாளராக களமிறங்கினார். அவரை எதிர்த்து சீனா ஆதரவுபெற்ற தேசியவாத கட்சியின் ஹவ் யொ-ஹி அதிபர் வேட்பாளராக களமிறங்கினார். தைவான் மக்கள் கட்சியின் கோ வென் ஜியும் ஒரு வேட்பாளராகக் களமிறங்கினார்.

அதிபர் தேர்தல் வாக்குப்பதிவு காலை 8 மணிக்கு தொடங்கி யது. மக்கள் நீண்ட வரிசையில் நின்று தங்கள் வாக்குகளைச் செலுத்தினர். தேர்தலில் ஆளும் ஜனநாயக முற்போக்கு கட்சி வேட்பாளர் லாய் சிங்-தே வெற்றிபெற அதிக வாய்ப்புள்ள தாக முதலிலேயே தகவல் வெளியானது.

இந்நிலையில், தைவான் அதிபர் தேர்தலில் ஆளும் கட்சி வேட்பாளரான லை சிங் டி வெற்றி பெற்றுள்ளார். விரைவில் அவர் அதிபராக பதவியேற்க உள்ளார்.



# பாகிஸ்தான் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீருக்கு பிரி. தூதர் சென்றமையால் இந்தியா கடுஞ்சீற்றம்

டில்லி,ஜன.14

பாகிஸ்தான் நாட்டிற்கான இங்கிலாந்து தூதர் ஜெனி மெரியட். இவர் கடந்த 10 ஆம் திகதி பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரின் மீர்பூருக்கு சென்றுள்ளார். அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற ஜெனி மெரியட் இது தொடர்பான படங்களையும் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

மேலும், ஜெனி மெரியட் தனது டுவிட்டர் பதிவில், “மீர்பூரில் இருந்து வணக்கம். இங்கிலாந்து – பாகிஸ்தான் மக்களிடையேயான இதயமே மீர்பூர்தான். இங்கிலாந்தில் உள்ள பாகிஸ்தானியர்களில் 70 சதவிகிதம் பேர் மீர்பூருடன் தொடர்புடையவர்கள். புலம்பெயர்ந்தோர் நலன்களுக்கு நாம் ஒன்றிணைந்து செயல்படுவது மிகவும் முக்கியமானது. உங்களின் விருந்தோம்பலுக்கு நன்றி” எனப் பதிவிட்டுள்ளார்.





இந்நிலையில், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீருக்கு இங்கிலாந்து தூதர் ஜெனி மெரியட் சென்றமைக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்தியாவுக்கான இங்கிலாந்து தூதரிடம் கண்டனத்தை தெரிவித்த மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம், ஒட்டுமொத்த ஜம்மு–காஷ்மீர், லடாக் யூனியன் பிரதேசங்கள் எப்போதும் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதிகள் என்று தெரிவித்துள்ளது.

மேலும், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீருக்கு பாகிஸ்தானுக்கான இங்கிலாந்து தூதர் ஜெனி மெரியட் சென்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது. அவரின் பயணம் இந்திய இறையண்மை, பிராந்திய ஒருமைப்பாட்டை மீறும் செயல் என்று இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

# தமிழகத்தில் தொகுதிப் பங்கீட்டுப் பேச்சு பொங்கலுக்குப் பின் என்கிறார் ஸ்டாலின்

சென்னை,ஜன.14

விரைவில் நடக்கவிருக்கும் இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கான தமிழகத் தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுகள் பொங்கல் பண்டிகைக்கு பிறகு ஆரம்பமாகும் என தி.மு.க. தலைவரும் தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் இந்தியா கூட்டணி தலைவர்கள் சார்பில் இன்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. காணொளி காட்சி மூலம் நடந்த ஆலோசனை கூட்டத்தில் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் கார்கே பங்கேற்றார். சிவசேனா, சமாஜ்வாடி, ராஷ்டீரிய ஜனதா தளம், கம்யூனிஸ்ட் தலைவர்களும் கலந்துகொண்டனர்.





தி.மு.க. சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்தக் கூட்டத்தில் காணொளிக் காட்சி மூலம் பங்கேற்றார். இதற்காக ஆழ்வார்பேட்டையில் உள்ள அவரது வீட்டில் காணொளிக் காட்சியில் மற்றத் தலைவர்களுடன் பேசுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன.

இந்நிலையில், ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தமிழகத்தில் பொங்கல் பண்டிகைக்கு பிறகு தொகுதிப் பங்கீடு பேச்சுகள் தொடங்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.



# தமிழரசுத் தலைமைப் போட்டியில் வெல்லப்போகிறவர் யார்?





புருஜோத்தமன் தங்கமயில்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் பொதுக்குழு உறுப்பினர்களின் நேரடி வாக்களிப்பு மூலம் தேர்வு செய்யப்படுவது உறுதியாகிவிட்டது. திருகோணமலையில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை (21ஆம் திகதி) நடைபெறும் தேர்தலில் வெற்றிபெறுபவர், வரும் 28ஆம் திகதி தமிழரசுக் கட்சியின் தலைவராக பொறுப்பேற்பார். கட்சி யாப்பின் பிரகாரம், அவர் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு கட்சியின் தலைவராக நீடிப்பார். தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரை தேர்தலின்றி பொது இணக்கப்பாட்டுடன் தேர்வு செய்வதற்கான முயற்சிகள் பல கட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அந்த முயற்சிகள் எவையும் வெற்றிபெறாத நிலையில், தலைவருக்கான தேர்தலை தமிழரசுக் கட்சி நடத்தவிருக்கின்றது.

பொது இணக்கப்பாட்டுடன் கட்சியின் தலைவர்களைத் தேர்வு செய்ய வேண்டும். அதுதான் கட்சியை ஒற்றுமையாக வைத்திருப்பதற்கு உதவும் என்ற பொதுப்புத்தியின் கருத்தியலோடு இந்தப் பத்தியாளருக்கு அவ்வளவு உடன்பாடு இல்லை. அதுவும், தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கும் கட்சிகள், இயக்கங்களில் தலைமைத்துவம் என்பது பெரும்பாலும் முதுசம் (பரம்பரைச் சொத்து) என்ற தோரணையில் பலரினாலும் கையாளப்படுகின்றது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட் தொடங்கி புதிதாக ஆரம்பிக்கும் கட்சிகள், இயக்கங்கள் வரையில் அதன் தலைவராக பொறுப்பேற்பவர், தன்னுடைய ஆயுட்காலம் பூராவும் தலைவராகவே இருக்க விரும்புகிறோர். தன்னுடைய காலத்துக்குப் பின்னும் தன்னுடைய குடும்பத்தார் தலைமைப் பொறுப்பிற்கு வரவேண்டும் என்பதில் கவனமாக இருக்கிறார்கள். இது, உட்கட்சி ஜனநாயகத்தை முற்றாக சிதைத்து, ஒருவரின் முழுமையான ஆளுகைக்குள் சென்று, கட்சியின் செயற்பாட்டை துருவநிலைப் படுத்தி, மக்களிடம் இருந்து அந்நியப் படுத்திவிருகின்றது. அவ்வாறான சூழலில் கட்சியின் தலைவரை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்வு செய்ய வேண்டும் என்ற சரத்தும், அதனை பொது இணக்கப்பாடு இல்லாத சூழலில் தேர்தல் மூலம் தெரிவு செய்து கொள்ள வேண்டும் என்ற விடயமும் தமிழரசுக் கட்சியின் யாப்பிலுள்ள ஜனநாயகத் தன்மையை பேணுவதற்கான காப்பாக கொள்ள முடியும்.

தந்தை செல்வா தமிழரசுக் கட்சியை ஆரம்பிக்கும் போது, அந்தக் கட்சி ஒருபோதும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் போன்று தனி ஒருவரின் ஆளுகைக்குள் சென்றுவிடக் கூடாது என்ற தீர்க்கதரிசனத்தின் அடிப்படையில் நிகழ்ந்த முக்கிய ஜனநாயக பாதுகாப்பாகும் இது. தமிழரசுக் கட்சியின் தலைவருக்கான போட்டியில் கட்சியின் எந்த உறுப்பினரும் போட்டியிட முடியும். அவருக்குப் பொதுக்குழு உறுப்பினர்கள் வாக்களிக்க முடியும்.



கட்சியின் தலைவர் ஒருவரை பொது இணக்கப்பாட்டுடன் தேர்வு செய்வது என்பது, அதிக நேரங்களில் கட்சியின் கடைக்கோடி உறுப்பினர்களதும் தொண்டர்களினதும் கருத்துக்களை உள்வாங்கி மேற்கொள்ளப்படுவதில்லை. மாறாக, கட்சியில் யார் அதிக ஆளுகையைச் செலுத்துகிறார்களோ அந்த ஒருசிலர் எடுக்கும் முடிவாகும். அவர்கள் எடுக்கும்

தொடர்ச்சி▼

# தமிழரசுத் தலைமைப் போட்டியில் வெல்லப்போகிறவர் யார்?

தொடர்ச்சி ▲

முடிவை மேலிருந்து கீழ் மட்டம் வரையில் திணிப்பார்கள். புதிய தலைவரும் கட்சியின் ஆளுகை வட்டத்துக்குள் இருந்து மட்டுமே தேர்வாகுவார். கட்சியின் தலைவருக்கும் கடைக்கோடி உறுப்பினருக்கும் அதிலிருந்து தெரிவாகும் பொதுக்குழு உறுப்பினர்களுக்கும் இடையில் போதிய உரையாடல்களே நிகழ்ந்திருக்காது. தலைவராக வரும்போதே அவர்கள் கொம்பு முளைத்தவர்கள் மாதிரியே கட்சியின் இரண்டாம் மூன்றாம் மட்டங்களில் உள்ளவர்களை அணுகுவார்கள். தேர்தல் வாக்களிப்பு அப்படியான சூழலை கட்சிக்குள் உருவாக்காமல், தலைவர் தங்களினால் நேரடியாக தேர்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்ற உணர்வு கட்சியின் தொண்டர்களை உற்சாகமாக வைத்திருக்கும். அது, கட்சியையும், தலைமையும் இயல்பாக அணுகக்கூடியது என்ற நிலை சார்ந்ததுமாகும்.

புதிய தலைவரை தேர்தல் வாக்களிப்பின் மூலம் தேர்வு செய்வது, கட்சியைப் பிளவுபடுத்திவிடும் என்ற நிலைப்பாடு பலரிடம் காணப்படுகின்றது. ஆனால், ஜனநாயகம் என்பதே ஒவ்வொருவரது உணர்வுகள், முடிவுகளையும் மதிப்பதாகும். அப்படிப்பட்ட நிலையில், போட்டியில் இருக்கும் நபர்களை எடைபோட்டு சரியானவர் என்று நம்புபவர்களை தேர்வு செய்வது என்பது ஜனநாயகத்தின் அடிப்படைகளில் ஒன்றாகும். அதனைப் புரிந்து கொள்ளாது, தனக்கு உவப்பான நபர் வெற்றிபெறவில்லை என்பதற்காக கட்சியில் பிளவினை ஏற்படுத்துபவர்களை எந்தத் தருணத்திலும் பொறுத்துக் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில், அவர்கள் ஒருபோதும் கட்சிக்கு விசுவாசமாக இருக்கவும் மாட்டார்கள். மாறாக, ஜனநாயக விரோத சிந்தனையுள்ளவர்களாகவே நோக்கப்படுவார்கள். மாற்றுக்கருத்துக்கள், கொள்கைகள் இருந்தாலும் மக்களின் வாக்களிப்பின் மூலம் தேர்வு செய்யப்படும் ஒருவரின் கௌரவத்தை காப்பாற்றுவதுதான் அரசியல் அடிப்படை. அப்படியான நிலையில், ஜனநாயக முறைப்படி தேர்வாகும் தலைவரை மதித்து, அவரின் கீழ் ஒருங்கிணைவதுதான் ஒழுங்கு. அந்த ஒழுங்குக்கு தயாராக இல்லாதவர்கள் குறித்து யாரும் கவலை கொள்ளத் தேவையில்லை. ஏனெனில், அந்த மனநிலையோடு இருப்பவர்களிடம் அதிகாரம் சென்று சேரும் போது, அதிகார துஷ்பிரயோகம் என்பது தாராளமாக இடம்பெறும். அது, கட்சியை மக்களிடம் இருந்து அந்நியப்படுத்திவிடும்.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவருக்கான தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.யோகேஸ்வரன் ஆகியோர் போட்டியிடுகிறார்கள். ஆனால், போட்டி என்பது 'சுமந்திரன் எதிர் சிறீதரன்' என்ற இருமுனையாக திறந்திருக்கின்றது. யோகேஸ்வரன், தன்னுடைய ஆதரவு சிறீதரனுக்கு என்று அறிவித்துவிட்டார். அப்படியானால், அவர் ஏன் தலைவருக்கான தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்தார் என்ற கேள்வி எழலாம். அவர், சிறீதரனின் தலைமைத்துவத் தேர்வை உறுதிப்படுத்துவதற்கான உத்தியாக களமிறங்கியிருக்கிறார். சுமந்திரனின் ஆதரவாளர்களாக இருக்கும் தன்னுடைய அனுதாபிகளை சிறீதரன் பக்கத்துக்கு நகர்த்தும் திட்டங்களின் போக்கிலானதாகும். இது, ஆரம்பத்திலேயே அனைவரினாலும் உணர்ந்து கொள்ளப்பட்டது. தேர்தல்களில் மற்றவர்களின் வெற்றியை உறுதி செய்வதற்காக அதிக தருணங்களில் டம்மி வேட்பாளர்கள் களமிறக்கப்படுவது வழக்கம். ஆனால் அப்படியானதொரு நிலைக்கு யோகேஸ்வரன் கீழிறங்கியமை வருத்தமானது. ஏனெனில், மட்டக்களப்பில் இருக்கும் தமிழரசின் மூத்த தலைவர்களில் யோகேஸ்வரன் முக்கியமானவர். மக்களால் தேர்வாகி நாடாளுமன்றத்தில் இருந்தவர். அப்படிப்பட்ட ஒருவர் ஏன் டம்மி வேட்பாளர் ஆனார்? அவரை யார் இயக்கியது? என்பதெல்லாம் தவிர்க்க முடியாத கேள்விகளாக தொடர்கின்றன. அவர், தனிப்பட்ட ரீதியில் சுமந்திரனின் வெற்றியை தவிர்ப்பதற்காக இந்தத் தீர்மானத்துக்கு வந்திருந்தால், அது அவருடைய தனி உரிமைதான். ஆனால், அந்தத் தனி உரிமை தன்னை கடந்த காலங்களில் ஆதரித்து நின்றவர்கள் மீது மறைமுகமாக செலுத்தும் ஆதிக்கமாக கொள்ளப்பட வேண்டியிருக்கிறது.



சுமந்திரனும் சிறீதரனும் தங்களின் வெற்றி தொடர்பில் உறுதியான நம்பிக்கை கொண்டிருப்பவர்களாகக் காட்டிக் கொள்கிறார்கள். மூத்த தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் அரசியல்குழுக் கூட்டத்திலும் பொது இணக்கப்பாட்டுடன் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக ஒருநாள் கால அவகாசம் வழங்கப்பட்டது. அது

தொடர்ச்சி ▼

# தமிழரசுத் தலைமைப் போட்டியில் வெல்லப்போகிறவர் யார்?

தொடர்ச்சி▲

வெற்றியளிக்கவில்லை. தேர்தல் மூலம் யார் தலைவராக தேர்வானாலும் அவரின் தலைமைத் துவத்தை மதித்துச் செயற்படுவர் என சுமந்திரனும் சிறீதரனும் தொடர்ச்சியாகக் கூறிவருகிறார்கள். தேர்தல் மூலம் தலைவரைத் தேர்தெடுப்பது கட்சி யின் ஜனநாயகத்தை காக்கும் என்றும் அவர்கள் கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்புக்களில் தெரிவிக்கிறார்கள்.

ஆனால், சிறீதரன் அடுத்த இரண்டு ஆண்டு களுக்கு தன்னிடம் தலைமைத்துவத்தை தரு மாறு கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்களிடம் மாத்திரமல்ல, சுமந்திரனை ஆதரிப்போர் என்று நம்புவோரிடமும் கேட்கிறார். சுமந்திரன் தலை மைத்துவப் போட்டியில் இருந்து விலகி தனக்கு இடமளிக்க வேண்டும் என்று கட்சியின் பொதுச் செயலாளரை தூது செல்லுமாறு சிறீதரன் கோரினார் என்ற விடயம் மேலே வந்திருக்கிறது. ஆனால், அதற்குப் பொதுச் செயலாளர் உடன்படவில்லை.

தலைமைத்துவப் போட்டியில் வென்றால் தலைவராகுவது, இல்லையென்றால் தோற்றாலும் தனக்கான ஆதரவு நிலையை இந்தத் தேர்தலில் நிரூபிப்பதன் மூலம் தேசிய அமைப்பாளர் என்ற பதவியை பெறுவதுதான் சிறீதரனின் நோக்கம் என்று கட்சியின் மூத்த தலைவர்கள் கூறுகிறார்கள். தமிழரசுக் கட்சியில் தேசிய அமைப்பாளர் என்ற பதவிநிலை இல்லை. ஆனால், அவ்வாறான பதவியொன்றை தனக்கு வழங்க வேண்டும் என்று சிறீதரன் ஐந்து வருடங்களுக்கு முன்னர் இருந்து கோரி வருகிறார். அதன்மூலம், வடக்கு கிழக்குப் பூராவும் தனக்கான ஆதரவாளர்கள் மட்டத் தைப் பெருக்கிக் கொள்ள முடியும் என்பது அவரது இலக்கு. அது, எதிர்காலத்தில் தலைமைத்துவப் போட்டியில் இலகுவாக வெற்றிபெற உதவும். தலைமைத்துவ போட்டியில் வென்றாலும் தோற்றாலும் அந்த முயற்சிக்குப் பின்னால் ஆதாயம் என்ற நிலையில் சிறீதரன் இருக்கிறார்.

சுமந்திரனைப் பொறுத்தளவில் தலைமைத்துவ போட்டியில் தான் இலகுவாக வென்றுவிடலாம் என்றுதான் ஆம்பத்தில் இருந்து நம்பினார். அது, கடந்த பொதுத் தேர்தலில் தான் அதிக வாக்கு களைப் பெற்று வெல்வேன் என்று நம்பியதற்கு ஒப்பானது. ஏனெனில், ஒரு கட்டம் வரையில், அதாவது சிறீதரன் போட்டியில் இறுதிவரை உறுதி யாக நிற்பார் என்று சுமந்திரன் நம்பவில்லை. ஒரு பேரம் பேசலுக்கான கட்டமாகவே சிறீதரன் இந்தத் தலைமைத்துவ தேர்தலை கையாள் கிறார், எனவே, ஒரு கட்டத்தில் சிறீதரன் தேர் தலில் இருந்து விலகி விடுவார் என்று சுமந்திரன் மாத்திரமல்ல, அவரது ஆதரவாளர்களும் நம்பி னார்கள். ஆனால், போட்டி எதிர்பார்த்தைவிட கடுமையானது என்பது இப்போது அவருக்குப் புரிந்திருக்கும். தலைமைத்துவ தெரிவில் பொதுக்குழு உறுப்பினர்கள் மாத்திமல்ல, வெளித் தரப்புக்கள் தங்களது தலைமைகளை நீட்டி ஆதிக்கம் செலுத்துகின்றன என்பதையும் அவர் உணரத் தொடங்கியிருக்கிறார். கடந்த பொதுத் தேர் தலில் இவ்வாறானதொரு சிக்கலை சுமந்திரன் எதிர் கொண்டார். வெளித்தரப்பினரின் பெருந்தொகைப் பணம் சுமந்திரனுக்கு எதிராகக் களத்தில் இறக் கப்பட்டது. அவரது கட்சியின் வேட்பாளர்கள் சிலரே, அதற்காக சோரம்போனதான குற்றச்சாட்டுக்கள் உண்டு. இம்முறையும் அவ்வாறான வெளித்தரப் புக்கள், சுமந்திரன் ஆதரவாளர்கள் என்று நம்பும் தரப்பினரை பணம் கொடுத்து வாங்க முனை கிறார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்திருக்கின்றது.

அதிலும், கட்சியின் மாநாட்டினை நடத்துவதற்கு குறித்த வெளித்தரப்பினரிடம் பணம் பெறலாம் என்று அரசியல்குழு உறுப்பினர் ஒருவர் கூறிய விடயம் கவனத்துக்குரியது. எனினும் அவரின் பரிந்துரையை அரசியல்குழு ஆரம்பத்திலேயே புறந்தள்ளிவிட்டது. வெளித்தரப்பினரிடம் பணம் பெற்று கட்சியை அவர்களிடம் அடகு வைக்கும் நிலைக்கு தமிழரசுக் கட்சி போன்ற தமிழ் மக்களின் பிரதான கட்சி செல்வது என்பது சாபக்கேடானது. அந்தச் சிந்தனையைக் கொண்டிருப்பவர்களை கட்சியினரும் தொண்டர்களும் புறக்கணிப்பதுதான் சரியாக இருக்கும்.

சுமந்திரனுக்கு எதிராக மத அடையாள விசமப் பிரச்சாரமும் மூத்த அரசியல் ஆய்வாளர்கள் என்று தங்களை அடையாளப்படுத்தும் சிலரினாலும், அடிப்படைவாத மதக்குழுக்களினாலும் மேற் கொள்ளப்படுகின்றது. இது, பௌத்த சிங்கள அடிப்படைவாதம் பரப்பும் பெரும்பான்மைவாதத் துக்கு ஒப்பானது. தமிழரசின் நிறுவனத் தலைவர் தந்தை செல்வா ஒரு கிறிஸ்தவர். அவருக்கு எதி ராக நின்றவர்கள் பலரும் தங்களை பெரும் சைவர்களாக காட்டிக் கொண்டவர்கள். ஆனால், தமிழ் மக்கள் தங்களுக்கு யார் தலைவராக வேண்டும் என்பதை மத அடையாளங்கள் தாண்டி நின்று தேர்வு செய்தார்கள். அந்தத் தெளிவு தமிழ் மக்களிடம் இருக்கும் போது, தமிழரசின் தொண்டர்களிடம் இல்லாமல் இருக்காது. இவ்வா றான விடயங்களை பிரிவினையை வளர்க்கும் உத்தியாகவே இந்தப் பத்தியாளர் நோக்குகிறார்.

நாக்பூர் 'ஆர்.எஸ்.எஸ்' கொடுங்கரங்கள் வடக்குக் கிழக்கு பூராவும் படரத் தொடங்கியிருக்கின்றது. அந்தக் கரங்களினால் தின்று கொழுத்தவர்களும், அகப்பட்டவர்களும் மதப் பிரிவினையை தோற்று விப்பதில் கவனமாக இருக்கிறார்கள். அவர்களில் ஒருசில அரசியல் ஆய்வாளர்களும் இருப்பதுதான் ஏமாற்றமானது. ஏனெனில், அவர்கள் தங்களை சமூக நீதியின் காவலர்களாக ஒலிவாங்கிகளுக்கு முன்னால் தொடர்ச்சியாக காட்டிக் கொள்பவர்கள். பண முதலைகளில் தலையீடு, மதப் பிரிவினைவாத சக்திகளின் பிளவுபடுத்தும் உத்தி ஆகியவற்றைத் தாண்டியும்தான் தமிழரசுக் கட்சியின் தலைமைத் துவத் தேர்வு இடம்பெற வேண்டியிருக்கின்றது.

தமிழ்த் தேசிய அரசியலில் தமிழரசுக் கட்சி யின் தலைமை என்பது, தவிர்க்க முடியாமல் ஆளுமைமிக்கது. புதிய தலைவராக யார் வரப் போகிறார் என்பதை ஏனைய கட்சிகளும் எதிர் நோக்கி இருக்கின்றன. சுமந்திரனோ, சிறீதரனோ யார் தலைவராக வந்தாலும், அது அவர்களுக்கு சற்று கடினமானதாகத்தான் இருக்கும். ஏனெ னில் கடந்த காலத்தில் அவர்கள், மாவை சேனாதி ராஜா என்ற தலைவரை இலகுவாக கையாண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், புதிய தலைமை அப்படியிருக்க வாய்ப்புக்கள் இல்லை. அதுபோக, புதிய தலைமை தன்னை தமிழ் மக்களின் பிரதான கட்சியின் தலைமையாகவே நிறுவி முன்நகரும். அது, கடந்த காலங்களில் தமிழரசுக் கட்சியின் முதுகில் சவாரி செய்தவர்களுக்கு உவப்பானதாக இருக்காது. ஆனால், தமிழரசுக் கட்சியின் புதிய தலைமைக்கு முன்னால் ஏகப்பட்ட கடப்பாடுகள் உண்டு. அது கட்சியைப் பாதுகாப்பது என்ற ஒற்றை நோக்கம் சார்ந்தது அல்ல. மாறாக, தமிழ்த் தேசிய அரசியலின் காப்பரணாக நின்று, தமிழ் மக்க ளின் அரசியல் விடுதலைக்கு அர்ப்பணிப்போடு செயற்படுவதாகும். அதனை நோக்கிய சிந்தனை யும் செயற்பாடும் அவசியமாகும். ■




# யாழ். பல்கலை ஊழியர் சங்கமும் மாணவர் ஒன்றியமும் கலந்தாய்வு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்திற்கும், மாணவர் ஒன்றியத்திற்கும் இடையிலான சிநேகபூர்வ கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

ஊழியர் சங்கத் தலைவர் தங்கராஜா, இணைச் செயலாளர் த.சிவரூபன் உள்ளிட்ட பல்கலைக்கழக ஊழியர் சங்கப் பிரதிநிதிகளிற்கும், மாணவர் ஒன்றியத் தலைவர் கு.துவாரகன், செயலாளர் சோ.சிந்துஜன் உள்ளிட்ட மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளிற்கும் இடையில் இந்த சிநேகபூர்வ சந்திப்பு இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# அச்சுவேலி - தொண்டமானாறு வீதி பயணிக்க முடியாத மோச நிலையில்

இந்த வீதி நீண்ட காலமாக திருத்தம் செய்யப்படாமல் குன்றும் குழியுமாக காணப்பட்டது. அதனால் அந்த வீதி ஊடாகப் பலரும் சிரமங்களுக்கு மத்தியிலையே பயணித்து வந்தனர்.

இந்நிலையில் கடந்த வாரங்களில் பெய்த மழை காரணமாக தொண்டமனாறு நீர்மட்டம் அதிகரித்து, அந்த வீதிக்கு மேலாக வெள்ளம் ஓடுகிறது.

ஏற்கனவே குன்றும் குழியுமாக இருந்த வீதி தற்போது வெள்ளம் மேவி ஓடுவதனால் , குழிகள் தெரியாததால், பலரும் விபத்துக்கு உள்ளாகி வருகின்றனர்.



புதிதாக அந்த வீதியில் பயணிப்பவர்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்குகின்றமையுடன், சிறிய ரக மோட்டார் சைக்கிள் மற்றும் கார்களில் பயணிப்போரின் வாகனங்களும் சேதமடைந்து வருகின்றன.

இந்த வீதி ஊடாகப் பயணிக்க முடியாத நிலைமைகள் காணப்படுகின்ற போதிலும் , அது தொடர்பிலான அறிவுறுத்தல்கள் காட்சிப்படுத்தப்படாமையால், பலரும் அந்த வீதி ஊடாக பயணித்து விபத்துக்களை சந்திக்க நேரிடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# கார் மோதி பாதசாரி பரிதாப உயிரிழப்பு

வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கொழும்பு, ஒருகொடவத்தை பகுதியில் கார் ஒன்று பாதசாரி மீது மோதியதில் அந்த நபர் சாவடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அப்பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய நபரே உயிரிழந்தவராவார்.

தெமட்டகொடை பிரதேசத்தில் இருந்து களனிப் பாலத்தை நோக்கிப் பயணித்த கார் மேற்படி பாதசாரி மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தின்போது படுகாயமடைந்த பாதசாரி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் நேற்று அதிகாலைசிகிச்சைபலனின்றிஉயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கார் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஒருகொடவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






# பொங்கல் வியாபாரம் களைகட்டல்!

(எஸ்.நிதர்ஷன்)

நாளை திங்கட்கிழமை தைப் பொங்கல் பண்டிகை கொண்டா டப்படவுள்ள நிலையில் பொங்கல் வியாபாரம் களைகட்டத் தொடங்கி யது.

குறிப்பாக, பொங்கல் பானை வியாபாரிகள், வெடி விற்பனையா ளர்கள் சந்தையில் குவிந்து வரு கின்றன.

அதேவேளை, யாழ்ப்பாணத் தின் பிரதான சந்தைகளில் ஒன் றான திருநெல்வேலி சந்தைக் கடை களிலும் இவ்வாறான நிலை காணப் படுகின்றது.

















# அம்பாறையில் அணைக்கட்டை அண்டிய பகுதிகளில் வெள்ள நீரில் மீன் பிடிக்க இளைஞர்கள் முண்டியடிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை மற்றும் நிந்தவூர் பிரதேசங்களிலுள்ள அணைக் கட்டுப் பிரதேசங்களில் வெள்ள நீர் வழிதோடும் இடங்களில் துள்ளிப் பாயும் பெருந்தொகையான ஆற்று மீன்களைப் பிடிப்பதற்காக அத்தாங் குடன் நூற்றுக் கணக்கான இளை ஞர்கள் படையெடுத்துள்ளனர்.

இப் பிரதேசங்களில் கடந்த இரு தினங்களாக மழை பெய்வது குறைந்துள்ள நிலையில் ஆற்றில் அதிகளவில் மீன்கள் பிடிக்கப்படு கின்றன.

கடல் மீன்களுக்கும், மரக்கறி வகைகளுக்கும் அதிக விலை நிலவு கின்ற இவ்வேளையில் பிரதேச மக்களுக்கு ஆற்று மீன் இலகுவாகக் கிட்டுவது ஆறுதலளிப்பதாக உள்ளது.








# இருபாலையில் தைப்பொங்கல் பொதிகள் யாழ்.லயன்ஸ் கழகத்தினரால் விநியோகம்






இருபாலை தெற்கு கிராம அபி விருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில், இருபாலை தெற்கு மாதர் கிராம அபி விருத்தி சங்க ஒழுங்கமைப்பில் யாழ். லயன்ஸ் கழகத்தினரால் தைப்பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டன.

யாழ்.லயன்ஸ் கழகத்தினரால் மாவட்ட ரீதியில் தைப்பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் இருபாலை தெற்கு பிரதேச மக்களுக்கான பொதிகள் வழங்கும் வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை பொதுநோக்குமண்டபத்தில் லயன்ஸ் கழகத் தலைவர் அலெக்ஸ்சாண்டர் நிக்ஸன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச பொதுமக்கள், பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள், லயன்ஸ் கழக உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# நயினாதீவில் 21 கிலோ கஞ்சாவுடன் ஒருவரை மடக்கிப் பிடித்த எஸ்.ரி.எவ்.



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நயினாதீவில் 21 கிலோகிராம் கஞ்சா நேற்று விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

நயினாதீவு பகுதியில் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டுள்ளது என்று விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இந்த 21 கிலோ கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

பத்து பொதிகளில் பொதிசெய்யப்பட்டு இந்த 21 கிலோகிராம் கஞ்சாவும் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் அப்பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக சட்ட நடவடிக்கைக்காகச் சந்தேகநபர் சான்றுப் பொருளான கஞ்சாவும் ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 14.01.2024

## மேஷம்

இன்று மிகவும் பிரமாதமான நாள். உங்களிடம் ஆற்றலும் நம்பிக்கையும் காணப்படும். இது வெற்றிக்கு வழி காட்டும்.

நீங்கள் பணியிடத்தில் உங்கள் அபாரமான முயற்சிகளின் மூலம் உங்கள் திறமைகளை பயன்படுத்தி பணியாற்றுவீர்கள். இதனால் நீங்கள் பணியிடத்தில் சகபணியாளர்களை விட முன்னணி வகிப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் நீங்கள் நட்பான உறவு முறை கொண்டிருபீர்கள். நீங்கள் உங்கள் துணையிடம் வெளிப்படையாக உணர்வுகளை வெளிபடுத்துவீர்கள்.

இன்று பண வரவு தாராளமாக இருக்கும். சேமிப்ப தற்கான வாய்ப்பும் அதிகம். பூர்வீக சொத்து வகையில் பணவரவு காணப்படும்.

இன்று உங்களிடம் இருக்கும் ஆற்றல் காரணமாக ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

## ரிஷபம்

இன்று நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள். இன்று புது நண்பர்களை உருவாக்கிக் கொள்ள வாய்ப்பு உள்ளது.

பணியில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் தனித்த திறமை மூலம் நீங்கள் உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் திறமையாக முடிப்பீர்கள். இதனால் தரமான பணிகளை வழங்குவீர்கள்.

உங்கள் துணையிடம் சகஜமாக நடந்து கொள்ள வேண்டும். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக சேமிப்பை பராமரிக்கும் வாய்ப்பு உள்ளது. பணியிடத்தில் பதிவு உயர்விற்கான வாய்ப்பு நிச்சயம் உள்ளது.

மகிழ்ச்சி மற்றும் சகஜமான அணுகுமுறை காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

## மிதுனம்

இன்று சற்று ஏமாற்றமான நாளாக இருக்கும். இன்று அவ்வளவு எளிதாக முன்னேற்றம் கிடைக்காது. சில சமயங் களில் நீங்கள் கட்டுப்பாட்டை இழப்பீர்கள்.

மேலதிகாரிகள் உங்கள் செயல் திறனில் திருப்தி அடைய மாட்டார்கள். இது உங்களுக்கு சற்று ஏமாற்றத்தை அளிக்கும். பணி களைக் கையாளும் போது கவனம் தேவை.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணை யுடன் வாய்ச்சண்டை ஏற்படும். நட்பாக அணுகுவதன் மூலம் பிரச்சினைகளை பேசி தீர்த்துக் கொள்ளலாம்.

இன்று பண இழப்பு காணப்படும். உங்கள் தாயின் ஆரோக்கியத்துக்காக பணம் செலவு செய்வீர்கள். பணத்தை கவனமா கவும் எச்சரிக்கையுடனும் கை-யாள வேண்டும்.

இன்று பல் வலி காணப்படலாம்.

## கடகம்

இன்று மந்தமான நாள். குழப்பமான எண்ணங்கள் காணப்படும். நீங்கள் அனுசரணையோடு நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணியில் வளர்ச்சி பாதிக்கப் படும். கடினமான பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ளததே இதற்கு காரணம் ஆகும்.

உறவில் காணப்படும் மோதல் காரணமாக உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள்.உங்கள் துணை யுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்பட உணர்ச்சிகளை கட் டுப்படுத்த வேண்டும்.

நீங்கள் பதவி உயர்வு மற்றும் அதன் மூலம் ஏற்படும் பண வரவு போன்ற வாய்பை இழப்பீர்கள். இதனால் பண வரவு குறைவாக இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

கண்கள் மற்றும் பற்களில் கவனம் தேவை.

## சிம்மம்

இன்று உங்களுக்கு அனுகூலமான நாள். உங்கள் நட்பான அணுகுமுறை காரணமாக நீங்கள் இன்று வெற்றியைக் கொண்டாடி மகிழ்வீர்கள்.

பணியிடத்தில் சாதகமான சூழ்நிலை காணப்படும். இதனால் பணியில் விருப்பமும் நல்ல பலனும் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறை கொண்டிருபீர்கள். இதனால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். அனைத்தும் உங்களுக்கு சாதகமாக நடக்கும். சேமிக் கும் வாய்ப்பும் அதிகரிக்கும். இன்று சேமிக்கும் பணம் உங்களுக்கு எதிர்காலத்தில் பயன்படும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் உற்சாகம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.

## கன்னி

இன்று எடுக்கும் முடிவுகள் நன் மையை அளிக்கும். இதனால் நீங்கள் புத்துணர்ச்சியுடனும் அதிக உறுதி யுடனும் நிறைய சாதிப்பீர்கள்.

நீங்கள் பணியில் இன்று சேவை மனப்பான்மை யுடன் செயல்படுவீர்கள். இதனால் உயர்ந்த நிலைக்கு செல்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் நேர்மையான உழைப்பின் மூலம் பணம் சம்பாதிக்கும் நாள். இன்று நீங்கள் பயனுள்ள முதலீடு களை மேற்கொள்ளலாம்.

இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் இன்று சுறுசுறுப்பாக இருப்பீர்கள்.

## துலாம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. உங்கள் இலக்குகளை அடைவதற்கான உற்சாகம் குறைந்து காணப்படுவீர்கள். உங்களை உற்சா கப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் மன ஆற்றலை வளர்த்துக் கொள்ளுங்கள்.

இன்று அதிக பணிகள் காணப்படும். பணிகளை முறையாக திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும். உங்கள் நன்மதிப்பிற்கு பாதிப்பு ஏற்படும்.

உங்கள் இருவரிடையே காணப்படும் தவறான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் இன்று வாக்குவாதம் காணப்படும்.

இன்று உங்கள் குடும்பத்திற்காக அதிக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும். தேவையற்ற செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்களிடம் காணப்படும் பதட்டம் காரணமாக நரம்பு பிரச்சினை உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.

## விருச்சிகம்

இன்று அமைதியின்மை காணப்படும். நீங்கள் பொறுமையுடன இருந்தால் இன்றைய செயல்களை எளிதாக கையாள இயலும்.

பணியைப் பொறுத்தவரை இன்று சலிப்பு காணப்படும். இயந்திரத்தனமாக காணப்படும். நீங்கள் பணியில் கட்டுப்பாட்டை இழந்து காணப்படுவீர்கள்.

உங்கள் துணையுடன் புரிந்துணர்வு குறைந்து காணப்படும். நீங்கள் அவரை தவறாக புரிந்து கொண் டதே இதற்கு காரணமாக இருக்கும்.

பணப்புழக்கம் இன்று சிறப்பாக இருக்காது. சேமிப்ப தற்கான வாய்ப்பை இழப்பீர்கள். எனவே கவனமாகவும் விவேகத்துடனும் செயல் பட வேண்டும்.

கண் எரிச்சலால் பாதிப்பு காணப்படும். கண்களுக்கு மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது நல்லது.

# இன்றைய ராசி பலன்கள் - 14.01.2024




இன்று மிகவும் அனுகூலமான நாள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்கலாம். இன்று மனதில் நம்பிக்கை காணப்படும்.

இன்று பணியில் நற்பெயர் பெறு வீர்கள். உங்கள் கடின உழைப் பின் மூலம் மேலதிகாரிகளின் நம்பிக் கையை பெருவீர்கள்.

உங்கள் துணையுடனான உங்கள் அணுகுமுறை சிறப்பாக இருக்கும். உங்கள் துணையிடம் நல்ல உணர்வை நீங்கள் பராமரிப்பதே இதற்கு காரணம்.

இன்று நிதிநிலையில் வளர்ச்சி காணப்படும். இன்று நல்ல சேமிப்பை பராமரிப்பீர்கள். அது பிற்காலத்தில் உதவும்.

உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். உங்க ளிடம் காணப்படும் உறுதி மற்றும் தைரியம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பதட்டம் காணப்படும்.தியானம் மேற்கொள்வதன் மூலம் அமைதியும் மன ஆறுதலும் பெறலாம்.

பணியில் மந்தத் தன்மை காணப்படும். அதிகப் பணிகள் காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. எந்தச் சிக்கலுமின்றி பணியாற்ற திட்டமிடுதல் அவசியம்.

குழப்பமான மன நிலை உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். இதனால் இருவரிடையே மோதல் காணப் படும்.

அதிகரிக்கும் பொறுப்புகளை சமாளிக்க கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இதனால் உங்கள் கடன் தொகை அதிகரிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. அதிக உழைப்பு மற்றும் சோர்வு காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சாதகமான நாள் அல்ல. சில சமயங்களில் நீங்கள் கட்டுப்பாட்டை இழப்பீர்கள்.அதனால் மதிப்பு மிக்க வாயப்புகளை இழப்பீர்கள். நீங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

பணியிடத்தில் சாதகமான நிலை இருக்காது. உங்களின் கவனக்குறைவு காரணமாக பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் நேர்மையாக நடந்து கொள்ள மாட்டீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும் இது உங்களுக்குசற்று கவலை அளிக்கும். எனவே நீங்கள் திட்டமிட்டு பணத்தை சாதுர்யமாக கையாள வேண்டும்.

பதட்டம் காரணமாக கால் மற்றும் தொடை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று அமைதியான மனநிலை காணப்படாது. பாதுகாப்பின்மை மற்றும் தன்னம்பிக்கை இன்மையே இதற்கு காரணம் ஆகும். பாதகமான விளைவு ஏற்படும் என்று மனதில் எண்ணுவீர்கள்.

இன்று பணியில் சிறப்பான வளர்ச்சி இருக்காது. நீங்கள் திட்டமிட்டு கவனமாகப் பணியாற்ற வேண்டும். இல்லையெனில் வெற்றி கிடைக்காது.

உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்த முய லுங்கள். நட்பான அணுகுமுறையை பராமரியுங்கள். நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்தி அவரை மகிழ்ச்சி செய்யுங்கள்.

நீங்கள் பெரிய முதலீடு செய்வதற்கு திட்டமிடுவீர் கள். இதனால் பண இழப்பு ஏற்படும். எனவே இந்த திட் டத்தை தவிர்க்கவும். பண விஷயத்தில் கட்டுப்பாட்டுடன் இருக்கவும்.









# இஸ்ரேலுக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம் கிண்ணியாவில்

(ஏ.எச்.ஹஸ்பர்)

இஸ்ரேலுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் பாலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவித்தும் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்றுக் கிண்ணியாவில் இடம்பெற்றது.

திருகோணமலை – மட்டக்களப்பு பிரதான வீதியில் பழைய ஆஸ்பத்திரி சந்தியில் ஆரம்பித்து கிண்ணியா பாலம் வரை ஆர்ப்பாட்டப் போராட்டம் இடம் பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தை கிண்ணியா சிவில் சமூகம் ஏற்பாடு செய்திருந்தது.

இதில் பள்ளிவாயல் சம்மேளனங்களின் உறுப்பினர்கள், சூறா சபை உறுப்பினர்கள். பாலஸ்தீனத்துக்கு ஆதரவான பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் “பாலஸ்தீனத்துக்கு எதிரான யுத்தத்தை நிறுத்து”, “பாடசாலைகள், வைத்திய சாலைகள் அழிப்பதை நிறுத்து”, “இனப்படுகொலையை நிறுத்து”, “குழந்தைகள், பிள்ளைகளை அழிப்பதை நிறுத்து!“ – முதலான கோசங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தென் ஆபிரிக்காவுக்கு நன்றி தெரிவித்தும், அமெரிக்கா, பிரித்தானியாவைக் கண்டித்தும் கோசங்களை எழுப்பினர். இவ் ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர்கள் கலந்து கொண்டனர்.

















